காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவரணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணிஆலோசனைக் கூட்டம் நேற்று 5.8.2025 பல்லாவரம் திடலில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் பிரபு, மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரவி மற்றும் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நாட்டில் பணப்புழக்கம் எவ்வளவு உள்ளது

பொதுமக்களின் அன்றாடத் தேவைக்கு குறைந்த மதிப்பிலான ரூபாய் நோட்டுகளை அச்சடிக்கும் திட்டம் உள்ளதா?

மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக 6-

நாட்டில் பணப்புழக்கம் எவ்வளவு உள்ளது என்றும், பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்காக குறைந்த மதிப்பிலான ரூபாய் நோட்டுகளை அச்சடித்து புழக்கத்தில் விட திட்டம் உள்ளதா என்றும் ஒன்றிய அரசிடம் நாடாளுமன்றத்தில் கிரிராஜன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

ஜூன் 30ஆம் தேதி நிலவரப்படி நாட்டின் நாட்டின் ரொக்க இருப்பு மற்றும் பணப்புழக்கத்தின் நிலை என்ன? பணப்புழக்கத்தின் பய்னபாட்டை ஒன்றிய அரசு கட்டுப்படுத்திகிறதா? புழக்கத்தில் உள்ள பணத்தின் மதிப்பு 37 லட்சம் கோடியைத் தாண்டிவிட்டதா? பொதுமக்களிடம் பணப்புழக்கம் பெருமளவில் அதிகரிக்க காரணம் என்ன? குறைந்த மதிப்பிலான ரூபாய்

நோட்டுகளை அச்சிட்டு புழக்கத்தில் விட திட்டம் உள்ளதா? என்ற கேள்விகளுக்கு பதிலளிக்கும்படி ஒன்றிய அரசின் நிதி அமைச்சரிடம் திமுக எம்.பி. இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பி இருந்தார்.

கிரிராஜனின் கேள்விகளுக்கு பதிலளித்துள்ள நிதி அமைச்சகத்தின் இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி, இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) விவரங்களின்படி அதனிடமுள்ள மொத்த கையிருப்பு ரூ. 49,23,705 கோடியாக உள்ளது என்றும், பணப்புழக்கத்தின் மதிப்பு ரூ. 38,20,866 கோடியாக உள்ளது என்றும், பொதுமக்களிடம் உள்ள பணத்தின் மதிப்பு ரூ. 37,22,292 கோடியும், வங்கிகளில் உள்ள வைப்புத்தொகையின் மதிப்பு ரூ. 2,43,46,478 கோடியும் சேர்ந்த பொதுமக்களின் பணத்தின் மதிப்பு ரூ. 2,81,77,467 கோடி என்றும் பதில் அளித்துள்ளார்.

மேலும், வெளிப்படையான, திறமையான, கட்டுப்பாடான நிதி சூழலை உருவாக்கும் முயற்சியில், டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்கும், அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளுக்கு ரொக்கப் பயன்பாட்டைத் தடுப்பதற்கும், வருமான வரிச் சட்டம், 1961 சட்டம் உள்ளிட்டவற்றில் திருத்தங்களை அரசாங்கம் செய்துள்ளதாகவும் ஒன்றிய இணை அமைச்சர் பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

2025 ஜூன் 27ஆம் தேதி அறிக்கையின் படி,ரூபாய் நோட்டுகள், நாணயங்கள், டிஜிட்டல் ரூபாய் ஆகியவை சேர்த்து ரூ. 38,20,866 கோடி அளவிற்கு புழக்கத்தில் இருப்பதாகவும் விவரத்தை வழங்கியுள்ளார்.

குறைந்த மதிப்புள்ள 10, 20, 50 ரூபாய் நோட்டுகளுக்கான தேவை என்பது ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்களை இணைப்பதன் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாகவும், அவற்றை அச்சிடுவது குறித்து ரிசர்வ் வங்கியுடன் ஒன்றிய அரசு கலந்தாலோசித்து, முடிவெடுப்பதாக, திமுக எம். பி. கிரிராஜனின் கேள்விக்கு இணை அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

பெண்கள் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடு – அதிகாரமளிப்பதில்

பங்களிப்பை மதிப்பாய்வு செய்வதற்கான முன்மொழிவு ஒன்றிய அரசிடம் உள்ளதா?

மக்களவையில் – கோவை கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!

புதுடெல்லி, ஆக 6-

பெண்கள் சுயஉதவி குழுக்களின் (SHGs) செயல்பாடு மற்றும் நாட்டில் பெண்கள் அதிகாரமளிப்பதில் அவர்களின் பங்களிப்பை மதிப்பாய்வு செய்வதற்கான ஏதேனும் முன்மொழிவு ஒன்றிய அரசிடம் உள்ளதா? அப்படியானால், அதன் முடிவு என்ன? இல்லை என்றால் அதற்கான காரணங்கள் என்ன? என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய அமைச்சர் பதில் வருமாறு :- மகளிர் சுயஉதவி குழுக்களின் (SHGs) கிராமப்புற செயல்திறன் மற்றும் பங்களிப்பை மதிப்பிடுங்கள். இருப்பினும், தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா-தேசிய வாழ்வாதார இயக்கத்தின் (DAY-NRLM) கீழ், பெண் சுயஉதவி குழுக்களின் (SHGs) செயல்திறன் பற்றிய வழக்கமான ஆய்வுகள் மற்றும் நாட்டில், பெண்கள் அதிகாரமளிப்பதில் அவர்களின் பங்களிப்பின் மதிப்பீடுகள், செயல்திறன் ஆய்வுக் குழு (PRC) கூட்டங்கள் (PRC) மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. தரவு, தேசிய அளவிலான கண்காணிப்பாளர்களின் கள வருகைகள் மற்றும் சுயாதீன மூன்றாம் தரப்பு ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் திட்டங்களின் மதிப்பீடு மற்றும் மதிப்பீடு கூடுதலாக, பின்வரும் மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டு ஆய்வுகள் நாட்டில் சுய உதவிக்குழுக்களின் பங்களிப்பையும் DAY-NRLM இன் விளைவுகளையும் புரிந்து கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ளன. DAY -NRLM இன் மதிப்பீட்டு ஆய்வு 2019 - 20 இல் தாக்க மதிப்பீட்டிற்கான சர்வதேச முயற்சியால் (3ie) நடத்தப்பட்டது. பீகார், மேற்கு வங்கம், ஒடிசா, ஜார்கண்ட், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் முழுவதும் ஆய்வின்முக்கியகண்டுபிடிப்புகள் பின்வருமாறு : வருமான மேம்பாடு : சிகிச்சைப் பகுதிகளில் பெண் சுய உதவிக் குழுக்கள் அடிப்படையை விட 19% வருமானம் அதிகரித்துள்ளது.கடன்முறைப்படுத்தல்: முறைசாரா கடன்களை நம்பியதில் 20% சரிவு ஏற்பட்டது, இது முறையான நிதிச் சேவைகளுக்கான மேம்பட்ட அணுகலைக் குறிக்கிறது.

சேமிப்பு வளர்ச்சி : பங்கேற்பாளர்கள் சேமிப்பில் 28% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளனர், இது வலுவான நிதி நிலைத்தன்மை மற்றும் வள மேலாண்மை ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.

தொழிலாளர் பங்கேற்பு: கட்டுப்பாட்டுப் பகுதிகளுடன் ஒப்பிடும் போது, சிகிச்சைப் பகுதிகளில் 4% அதிகமான பெண்கள் இரண்டாம் நிலைத் தொழில்களைப் புகாரளிப்பதன் மூலம் தொழிலாளர் படை ஈடுபாடு கணிசமாக உயர்ந்துள்ளது. சமூகத் திட்டங்களுக்கான அணுகல்: சிகிச்சைக் குடும்பங்களால் பெறப்படும் சமூக நலத் திட்டங்களின் எண்ணிக்கையில் 6.5% அதிகரித்தது (2.8 திட்டங்களின் அடிப்படையுடன் ஒப்பிடும் போது), மேம்பட்ட விழிப்புணர்வையும் மக்கள் நலத் திட்டங்களின் அணுகலையும் வெளிப்படுத்துகிறது. அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் மகிலாகிசனின் நிலையைப் புரிந்து கொள்வதற்கான ஆய்வு, டெவலப்மெண்ட் & ரிசர்ச் சர்வீசஸ் (பி) லிமிடெட் (டிஆர்எஸ்) 2024-25ல் ஆறு மாநிலங்களில் (அருணாச்சலப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, கேரளா, உத்தரப் பிரதேசம்) நாட்டின் பல் வேறு பகுதிகளில் இருந்து நடத்தப்பட்டது.

ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள் பின்வருமாறு : மகிலா கிசான்களின் சமூக-பொருளாதார அதிகாரமளித்தல்: மஹிலா கிசான்களில், திட்டத்தின் அறிக்கை நன்மைகள் அதிகரித்த நம்பிக்கை (48%), மேம்பட்டமுடிவெடுக்கும் மற்றும் குறைக்கப்பட்ட தொழிலாளர் செலவுகள் (32%), மேம்பட்ட விவசாய அறிவு (40%) மற்றும் அதிக தானிய விளைச்சல் (52%) ஆகியவை அடங்கும். கூடுதலாக, இந்தத் திட்டம் ஆண்டு வருமானத்தில் அதிகரிப்புக்கு பங்களித்தது, 18% பங்கேற்பு குடும்பங்கள் ஆண்டு வருமானத்தில் கூடுதல் 7% கூடுதல் ஆதாயங்களைப் புகாரளித்தன. ஸ்டார்ட்-அப் கிராமத் தொழில் முனைவோர் திட்டத்தின் (SVEP) மதிப்பீடு மேம்பாடு & நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

ரிசர்ச் சர்வீசஸ் (பி) லிமிடெட் (டிஆர்எஸ்) 2024 இல். ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள் பின்வருமாறு : SVEP மூலம் பெண்களுக்கு அதிகாரமளித்தல்:

இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சாதனை பெண்களின் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதில் அதிக கவனம் செலுத்துவதாகும் 71% நிறுவனங்கள் பெண்களுக்குச் சொந்தமானவை, கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் அதன் பங்கு. சுமார் 35% தொழில்முனைவோர் தங்கள் SVEP-ஆதரவு நிறுவனங்களைத் தொடங்குவதற்கு முன் வருமானம் ஈட்டும் செயல்களில் ஈடுபடவில்லை, மேலும் இந்த நிறுவனங்களில் தோராயமாக 74% இப்போது குடும்ப வருமானத்தின் முதன்மை ஆதாரமாகி விட்டன. ஊரக வளர்ச்சி அமைச்சகம் (MoRD) 2023 இல் வணிக நிருபர்கள் (BC) சாகி மாதிரியின் செயல்திறன் குறித்த ஒரு ஆய்வை நியமித்தது, இது மாதிரியின் விரிவான பகுப்பாய்வை அதன் செயலாக்க கட்டமைப்பு, பயிற்சி மற்றும் வரிசைப்படுத்தல் செயல்முறைகள், வழங்கப்படும் சேவைகள் மற்றும் கிராமப்புற சமூகங்கள் இரண்டிலும் அதன் தாக்கத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள் பின்வருமாறு: 45% BC சாக்கியர்கள் DIGI-PAY SAKHIS ஆக மாறியுள்ளனர், இதன் மூலம் டிஜிட்டல் நிதிச் சேவைகளை வழங்குவதில் அவர்களின் திறன்களை விரிவுபடுத்தியுள்ளனர். BC சாக்கியர்களின் வருமான நிலைகளுக்கும் அவர்களின் தொழில் முனைவோர் ஈடுபாட்டிற்கும் இடையே உள்ள உறவு தொடர்பாக ஒரு சுவாரஸ்யமான போக்கு வெளிப்பட்டுள்ளது. 61%க்கும் மேலான BC சாக்கியர்கள் வங்கி நிருபர்களாக தங்கள் பங்கின் மூலம் கிடைக்கும் வருமானத்தை மட்டுமே நம்பியுள்ளனர். BC ஏஜெண்டுகளாக தங்கள் பங்கை மட்டுமே நம்பியிருக்கும் BC சாக்கியர்கள், தங்கள் வருமான ஆதாரங்களை பன்முகப் படுத்துபவர்களைக் காட்டிலும் இந்தச் செயல்பாட்டின் மூலம் அதிகம் சம்பாதிக்க முனைகிறார்கள். இந்த முடிவுகள், DAY-NRLM திட்டத்தின் கீழ் நீடித்த மற்றும் பயனுள்ள ஆதரவின் மூலம் பெண்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டின் தரவு ஆதரவு ஆதாரத்தை வழங்குகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணி!

சென்னை வடக்கு மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்பீர்!

திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்திடுவீர்!

மாவட்டப் பொறுப்பாளர் – ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஆக 6-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை 07.08.2025 வியாழன் கிழமை அன்று காலை 6.30 மணியளவில் அமைதிப் பேரணியில் பங்கேற்பதுடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதுடன், ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கிட வேண்டும் என்று மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ., அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் மக்களுக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் தன்னை அர்ப்பணித்து, மக்களின் தேவை அறிந்து திட்டங்களைத் தீட்டி அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டிற்கு, ஏன் இந்தியாவிற்கே முன்னோடி; முதன்மையானத் திட்டங்களைத் தீட்டி முன்மாதிரியாக ஒரு அரசு எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கு தான்

முதலமைச்சராக இருந்து திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

தன் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டுக்காக, தமிழ் மொழிக்காக, தமிழ் மக்களுக்காகவே தனது 14 வயதில் மக்கள் பணி தொடங்கி 95 வயது வரையில் தன் உயிர் மூச்சுவரை வாழ்ந்திட்ட பெருமகன், திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அப்படிப்பட்ட திராவிட இயக்கப் பெருந்தலைவர் கலைஞர் அவர்கள் 07.08.2018 -ஆம் ஆண்டு நம்மை விட்டுப் பிரிந்துச் சென்றாலும், இன்றும் நம் ஊனோடும், உணர்வோடும் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்.

நம் உணர்வோடு கலந்த கலைஞர் அவர்களின் 7-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வருகிற 07.08.2025 வியாழன் கிழமை அன்று காலை 6.30 மணியளவில் சென்னை வடக்கு மாவட்ட திமுக சார்பில் எனது (மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர், எம்.எல்.ஏ.) தலைமையில் இராயபுரத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் படவிருக்கிறது.

அதேபோன்று நமது சென்னை வடக்கு மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படங்களுக்கும் 07.08.2025 அன்று காலை, மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதுடன், ஏழை மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றிய கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஆங்காங்கே ஏழை எளிய மக்களுக்கு உணவு மற்றும் நலதிட்ட உதவிகள் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் திராவிட மாடல் அரசின் நாயகர், கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில், அவருக்கு உறுதுணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் நமது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்த்திடும் வகையில் கலைஞர் அவர்களின் 7-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கழகத்தினர் தங்களது இல்லங்களிலும் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதி கள் - அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் - வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வி.செந்தில்பாலாஜி தலைமையில்

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு மாபெரும் அமைதிப் பேரணி!

மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!

கோவை, ஆக 6-

கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வருகிற 7-ம் தேதி அன்று கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் குனியமுத்தூர், முத்துச்சாமி திருமண மண்டபத்தில் இருந்து அமைதி பேரணியாக சென்று குனியமுத்தூர் பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது இதில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுமென கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:

தமிழே உயிராக, தமிழர் வாழ்வே மூச்சாக, தமிழ் நாட்டின் உயர்வே வாழ்வாகக் கொண்டு வாழ்ந்த தமிழினத் தலைவர், செம்மொழி காவலர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கலைஞரின் நினைவை போற்றி கழகத்தின் வெற்றிக்கு உறுதியேற்போம் என வருகிற 7-ம் தேதி அமைதிப் பேரணியாக சென்று முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு தினத்தை நினைவு கூற வேண்டும் என கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார், அவர்களின் ஆணைக்கிணங்க கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வருகிற 7-ம் தேதி வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி

தலைமையில் மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகிய எனது முன்னிலையில் குனியமுத்தூர் திருமண மண்டபத்தில் இருந்து அமைதி பேரணியாக சென்று குனியமுத்தூர் பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட உள்ளது.

இந்த மாபெரும் அமைதிப் பேரணியில் வடக்கு மாவட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள் என பெரும் திரளாக அனைவரும் பங்கேற்று அமைதிப் பேரணியை சிறப்பு செய்து முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றிட வேண்டுமென கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 7–ம் ஆண்டு நினைவு நாள்!

திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மரியாதை!

மாவட்டப் பொறுப்பாளர் – மேயர் ந.தினேஷ்குமார் அறிக்கை!

திருப்பூர், ஆக 6-

தந்தை பெரியாரின் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணாவின் லட்சியங்களையும் உயிர் மூச்சாக கொண்டு கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இனம், தமிழ் மொழி காக்கும் பொறுப்பினை தன் தோளிலே சுமந்து தமிழ் மொழி காத்து, வெற்றி நடை போட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். 1969 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்றது முதல் தமிழ்ச் சமுதாய மக்களின் நலன்காக்கும் எண்ணில டங்கா திட்டங்கள், தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாத்தல், சமூகநீதி, மத நல்லிணக்கம், ஒடுக்கப்பட்டோர் உரிமையினை பாதுகாத்தல் என தொடர்ந்து உழைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஏழை, எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், நெசவாளர்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என அனைத்து தரப்பினரின் நல்வாழ்வுக்காக கண்துஞ்சாமல் தொடர்ந்து உழைத்த தூய தலைவர், செம்மொழி காவலர், நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியாருக்கு பிறகு, பேரறிஞர் அண்ணாவிற்கு பிறகு தலைவர் கலைஞர் இல்லாமல் இருந்திருந்தால் இந்த தமிழ்ச் சமுதாயம் நாதியற்று போய் இருக்கும். தலைவர் கலைஞர் அவர்களால் தான் தமிழினம் தலை நிமிர்ந்தது.

இன்று நம் உயிர் நிகர் தலைவர், தமிழக முதல்வர், கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், தலைவர் கலைஞர் வழியில் உலகம் போற்றும் வகையில் நல்லாட்சியை தந்து கொண்டிருக்கிறார்கள். தலைவர் கலைஞரின் நினைவை போற்றும் வகையில் வருகின்ற 07.08.2025 வியாழக்கிழமை அன்று திருப்பூர் வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து வார்டுகளிலும், கிளைக் கழகங்களிலும் காலை 8.00 மணிக்கு கலைஞர் அவர்களின் திருவுவுருவப் படம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டுமெனவும். அதனைத் தொடர்ந்து, காலை 09.00 மணியளவில் திருப்பூர் - வேலம்பாளையத்தில் அமைந்துள்ள வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாவட்டக் கழக பொறுப்பாளரும், மாநகராட்சி மேயருமான ந.தினேஷ்குமார் ஆகிய எனது தலைமையில் நடைபெற உள்ளது.

அது சமயம் வடக்கு மாநகர பொறுப்பாளர், மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக, செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொ.மு.ச. நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன் பிறப்புகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்வதோடு பொதுமக்களையும் அதிக அளவில் பங்குகொள்ள செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளரும், மாநகராட்சி மேயருமான ந. தினேஷ்குமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு தலைமையில்

சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் ச.அசோக்குமார் வேண்டுகோள்!

சென்னை, ஆக 6-

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்ட கழக பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று 06-08-2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் காணொளி காட்சி வாயிலாக (ZOOM MEETING) நடைபெறுகிறது.

ஆகவே இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்டத்திற்குபட்ட மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள், தலைவர், துணை தலைவர் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தமிழனத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாள், கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட திமுக பொறியாளர் அணி - மாவட்ட அமைப்பாளர் ச.அசோக்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.